பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 23 செவ்வாய்க்கிழமை 05.04.2022 கதிர் 20

## நிதி அமைச்சின் செயலரும் விலகல்



திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆட்டிகல பதவி விலகியுள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அரசதலைவரிடம் தாம் கையளித்துள்ளேன் என அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.



அமெரிக்கத் தூதர் 'டுவிட்'

## முக்கியமான கட்டத்தில் இலங்கை; ஒவ்வொருவரின் குரலும் முக்கியம்

இலங்கை தனது வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கும் இந்தத் தருணத்தில், ஒவ்வொருவரினதும் குரலும் முக்கியமானதாகும்.

– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

இதனை தனது டுவிட்டர் பதிவில் வெளியிட்டுள்ள அவர், எதிர்ப்பாளர்கள் அமைதியுடன் செயற்பட வேண்டும். அவர்களின் குரல்கள் மற்றும் ஒற்றுமையைப் பயன்படுத்தி மாற்றத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகளை நான் வரவேற்கின்றேன்.

இதற்கான தீர்வை விரைவாகக் கண்டறிந்து நடைமுறைப்படுத்தி, இலங்கை மக்களின் மனதை வெல்லுமாறு அரசைக் கோருகிறேன் – என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

* அதியுயர் சபையில் அரங்கேறும் அதிரடிகள்
* ஆளும் தரப்பிலிருந்து 42 எம்.பிக்கள் விலகல்

# பெரும்பான்மைப் பலத்தை இழந்தது கோட்டாபய அரசு

* 4 சுயாதீன அணிகள் உதயம்
* நாடாளுமன்றத்தில் பரபரப்பு



**நாடாளுமன்றத்தில் அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதற்கு 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அத்துடன், நாடாளுமன்றத்தில் 4 சுயாதீன அணிகளும் உதயமாகியுள்ளன.**

☞ 2

## புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசு வேண்டும்

சபாநாயகரிடம் விஜயதாஸ எம்.பி. கோரிக்கை



புதியபிரதமர்தலைமையில் இடைக்கால அரசொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவும்.

– இவ்வாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார் ஸ்ரீலங்கா பொதுஜன

☞ 2

### 15 ஆண்டுகளுக்குப் பின்னர்



## ராஜபக்ஷக்களுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது இ.தொ.கா.

இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து ஜீவன் இராஜிநாமா

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தான் வகித்துவந்த இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்துள்ளார். இது தொடர்பான கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய

☞ 2

## பதவி விலகினார் புதிய நிதி அமைச்சர்



புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்றி, தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் விரிவான கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அமைச்சரவை பதவி விலகியதன் பின்னர் நேற்று தற்காலிகமாக நால்வர் அமைச்சராக நியமிக்கப்பட்டனர். அதில் அலி சப்றியும் ஒருவர்.

இந்நிலையிலேயே அவர் இன்று பதவி துறந்துள்ளார்.

## குடும்பத்துடன் தப்பியோடும் ராஜபக்ஷக்களின் சகாக்கள்!



அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரும், ராஜபக்ஷ ஆட்சியாளர்களின் சகாவாகக் கருதப்பட்டவருமான நிஸங்க சேனாதிபதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இரகசியமாக நாட்டைவிட்டு

☞ 2

## இன்று முதல் சு.க. தனிவழி

மைத்திரி அறிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினராகிய நாங்கள், இன்று முதல்

☞ 2

## இந்த ஆட்சி உடன் மாறட்டும்; நிலையான அரசு மலரட்டும்!



சபையில் விமல் வலியுறுத்து

நாட்டில் உள்ள தற்போதை அரசு உடனடியாக மாறி நிலையான அரசொன்றை நிறுவவேண்டும்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ எம்.பி. வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்

☞ 2

## பிரதி சபாநாயகர் இராஜிநாமா!



பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து இராஜிநாமா செய்கிறேன் என ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்படுவதாக அறிவித்ததையடுத்து, இந்தத் தீர்மானத்தை எடுத்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாடாளுமன்றில் பஸில்



எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நான்கு மாதங்களின் பின்னர் இன்று நாடாளுமன்றம் வருகை தந்தார் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பஸில் நிதியமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றத்திற்கு வராமையால் மக்கள் மத்தியில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார். நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நுழைந்தமையைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏனைய அமைச்சர்களுடன் பஸிலும் தனது நிதியமைச்சர் பதவியிலிருந்து விலகினார். இதனை தொடர்ந்து, அவர் நாட்டை விட்டு வெளியேறி மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளார் என அண்மையில் செய்திகள் பரவின.

இருப்பினும் அவர் இன்று நாடாளுமன்றில் பிரசன்னமாகி அமைதியாக அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசு பதவி விலகுவதானாலும் ஜனநாயக முறைமையில்தான்

ஜனநாயக நடைமுறைகளுக்கு அமையவே அரசாங்கம் பதவி விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினாலும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் இப்படி நடப்பதை நாம் பார்த்துள்ளோம். 88 மற்றும் 89 காலகட்டங்களிலும் இதேபோன்றதொரு சம்பவம் நடந்துள்ளது. எங்களுக்கு நாடாளுமன்றம் தேவையில்லை, ஜனநாயகம் தேவையில்லை என்றனர். இறுதியில் 60,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இன்றும் நாங்கள் அதை நோக்கி செல்கிறோமா? என்றே நாம் கேட்கிறோம். - என்றார்.

# லஞ்சம் வாங்கிய பொலிஸ் இளவாலையில் சிக்கினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

கள்ளனிடம் லஞ்சம் வாங்கியவர் எனக் கூறப்படும் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் ஒருவர் திருட்டு குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை வழக்கில் இருந்து விடுவிப்புச் செய்யும் நோக்கில் 30 ஆயிரம் ரூபா பணம் வாங்கும்போதே கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

லஞ்ச, ஊழல் குற்றத் தடுப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மேலதிக விசாரணைக்காக கொழும்பிற்குக் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# வீதிப் போராட்டங்களில் கொழும்புப் பேராயரும்!



தென்னிலங்கையில், தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கோட்டாபயவின் இல்லம், மஹிந்தவின் இல்லம், சமல் ராஜபக்ஷவின் இல்லம் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் எதிரான முற்றுகைப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், பொதுமக்கள் நடத்தி வரும் அமைதியான போராட்டங்களில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கலந்துகொண்டுள்ளார்.

இந்த போராட்டத்தில் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் பல அருட்தந்தைகளும், கன்னியாஸ்திரிகள் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளும் இணைந்து மக்களுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

இன்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளையும் தேசியக் கொடியையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்துடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் மாலைதீவுக்குச் சென்றுள்ளார் என்று நம்பகமான வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அவர் விமான நிலையத்துக்கு வந்த போது, விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தின் அனைத்து பாதுகாப்பு கமராக்கள் கொண்ட கமரா அமைப்பு செயலிழந்தது எனக் கூறப்படுகின்றது.

இன்று காலை 8.20 மணியளவில் UL102 என்ற விமானத்தில் அவர் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் உள்ள பாதுகாப்பு கமரா அமைப்பின் கோளாறு குறித்து விமான நிலையத்தின் பாதுகாப்புப் படையினர் விசாரணையைத் தொடங்கியுள்ளனர் என்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்த ஆட்சி உடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எமது கூட்டணியில் உள்ள 10 அரசியல் கட்சிகளும் அதில் உள்ள 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்பு போலவே தொடர்ந்து சுயாதீனமாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெரும்பான்மைப் பலத்தை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில ஆகியோரை உள்ளடக்கிய 10 கட்சிகளின் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அநுரபிரியதர்ஷன யாப்பா அணி ஆகியனவே சுயாதீனமாகச் செயற்படும் அறிவிப்பை இன்று சபையில் விடுத்தன.

10 கட்சிகளின் அணி

1.விமல் வீரவன்ஸ
2.உதயகம்மன்பில
3.வாசுதேவ நாணயக்கார
4.திஸ்ஸவிதாரண
5.டிரான் அலஸ்
6.அத்துரலிய ரத்தன தேரர்
7.கெவிந்து குமாரதுங்க
8.வீரசுமன வீரசிங்க
9. அசங்க நவரத்ன
10. மொஹமட் முஸம்மில்
11. நிமல் பியதிஸ்ஸ
12. காமினி மலேகொட
13. அதாவுல்லா
14. கயாசான்
15. ஜயந்த சமரவீர.
16. உத்திக பிரேமரத்ன

சுதந்திரக்கட்சி

17.மைத்திரிபால சிறிசேன
18. நிமல் சிறிபாலடி சில்வா
19. மஹிந்த அமரவீர
20. தயாசிறி ஜயசேகர
21. துமிந்த திஸாநாயக்க
22. லசந்த அழகியவன்ன
23. ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய
24. ஜகத் புஷ்பகுமார
25. ஷான் விஜேலால்
26.சாந்த பண்டார
27. துஷ்மந்த மித்ரபால
28. சுரேன் ராகவன்
29. அங்கஜன் இராமநாதன்
30. சம்பத் தஸநாயக்க.

அநுர அணி

31. அனுசபிரியதர்ஷன யாப்பா
32. சுசில் பிரேமஜயந்த
33.சுதர்ஷினிபெர்னான்டோபுள்ளே
34. ஜோன் செனவிரத்ன
35. சந்திம வீரக்கொடி
36 .நிமல் லான்சா
37. ரொஷான் ரணசிங்க
38.ஜயரத்ன ஹேரத்
39. நளின் பெர்னான்டோ
40. பிரியங்கர ஜயரத்ன

இ.தொ.கா.

41. ஜீவன் தொண்டமான்
42. மருதபாண்டி ராமேஸ்வரன்

விஜயதாஸ ராஜபக்ஷ ஏற்கனவே அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டுள்ளார்.

பொதுத்தேர்தலில் மொட்டுக் கட்சிக்கு போனஸ் ஆசனங்கள் சகிதம் 145 ஆசனங்களே கிடைக்கப்பெற்றன. அந்த வகையில் சாதாரண பெரும்பான்மையை (113) அரசு இழந்துவிட்டது. டலஸ், பிள்ளையானின் ஆதரவு இருந்தும்கூட சாதாரண பெரும்பான்மை அரசுக்கு இல்லை.

## ராஜபக்ஷ ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்காமல், சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் இ.தொ.கா. தீர்மானித்துள்ளது. அரசுக்கான ஆதரவும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

2020 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் போட்டியிட்ட காங்கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் இரு ஆசனங்களைப் பெற்றது. (ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன்)

சுமார் ஒன்றரை தசாப்தங்களுக்குப் பின்னர் ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை, இ.தொ.கா. இன்று வாபஸ் பெற்றுள்ளது.

2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டு வெற்றிபெற்றார். அந்த காலப்பகுதியில் இருந்துதான் ராஜபக்ஷ ஆட்சி ஆரம்பமாகியது. ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரித்த இ.தொ.கா. தேர்தலின் பின்னர், மஹிந்த அரசில் இணைந்தது.

2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியது. பொதுத்தேர்தலிலும் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டது.

2015 இலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கியது. எனினும், மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தார். ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு இ.தொ.கா. பகுதியளவான ஆதரவை வழங்கியது. முத்து சிவலிங்கம் பிரதி அமைச்சர் பதவியை வகித்தார். ராஜபக்ஷக்களுக்கான ஆதரவு முழுமையாக விலக்கிக்கொள்ளப்படவில்லை. மைத்திரியும், மஹிந்தவும் இரு கண்கள் என தொண்டமான் புகழ்ந்து பேசியிருந்தார்.

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இ.தொ.கா. ஆதரவு வழங்கியது. 2020 பொதுத்தேர்தலிலும் மொட்டு சின்னத்தில்தான் போட்டியிட்டது.

2022 இல் ராஜபக்ஷ அரசில் இருந்து வெளியேறும் முடிவை இ.தொ.கா. எடுத்துள்ளது.

## புதிய பிரதமர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு கூடியது. இதன்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில் ஏற்படும் நிலைமைக்குச் சபாநாயகர் பொறுப்புக் கூறவேண்டி வரும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இன்று முதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளோம். அதன்படி, எங்களுடைய 16 உறுப்பினர்களும் சுயாதீனமாகச் செயற்படவுள்ளோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. சபையில் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முழுச் சமூகமும் வீழ்ச்சியடைந்துள்ளது. மருந்துகளுக்குக்கூடத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு மத்தியில் மக்கள், அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குச் சார்பாக சுதந்திரக் கட்சி இருக்கும்.

அவசரகால நிலைமை அமுல்படுத்தியுள்ளதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நீக்கி, 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும். எனவே, இன்று முதல் நாங்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளோம். அதன்படி, எங்களுடைய 16 உறுப்பினர்களும் சுயாதீனமாகச் செயற்படவுள்ளோம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அங்கீகாரமற்ற அவசரகால நிலை

உள்நாட்டு நெருக்கடி உச்சத்தை தொட்டு விட்டது. இந்தப் பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி இந்த அதிகார பீடம் இரண்டு தளங்களில் சிக்கல்களை எதிர்கொண்டு நிற்கின்றது.

ஒன்று – நாடாளுமன்றத்தில். மற்றது – பொது மக்கள் மன்றத்தில்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 69 லட்சம் மக்களின் வாக்குகளோடு அதிகாரத்திற்கு – பதவிக்கு – வந்தவர். இப்போது இரண்டரை வருடங்களுக்குள் முழு நாடுமே அவருக்கு எதிராக கொதித்தெழுந்து, அவரைப் பதவியை விட்டு வெளியேறும்படி ஒரே குரலில் அழுத்தம் கொடுத்து, கங்கணம் கட்டி நிற்கிறது. மக்கள் வீதிக்கு வந்து விட்டார்கள். மக்கள் போராட்டங்கள் எழுச்சி பெற்று வலுக்கின்றன. போகப்போக நிலைமை மோசமடையும் போக்கே தென்படுகின்றது. மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத நெருக்கு வாரம் ஆட்சிப் பீடத்திற்கு விரைந்து வந்து கொண்டிருக்கின்றது.

ஆட்சித் தலைமைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி வெடிப்பதை உணர்ந்த ஆட்சித் தரப்பின் பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றாகக் கழறத் தொடங்கிவிட்டன. நூற்றி நாற்பத்தியைந்து எம்.பிக்களாக இருந்த ஆட்சி கூட்டமைப்பில் இருந்து மொத்தம் 4 குழுக்களாக 42 பேர் விலகி விட்டனர். அவர்கள் தனித்தனி சுயாதீனக் குழுக்களாகி விட்டனர். நாடாளுமன்றப் பெரும்பான்மையை அரசு இழந்து விட்டது என்பதும், மாற்று வழி இல்லாததால் அது ஆட்சியில் தொடர்கின்றது என்பதும் தெரிந்த விடயங்கள்.

இதற்கிடையில், மக்களின் எழுச்சியை எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி அவசரகால நிலைமையை பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தி உள்ளார். அத்தகைய சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, அடுத்த 14 நாள்களுக்குள் நாடாளுமன்றில் அதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அதன் பின்பு மாதத்துக்கு ஒரு தடவை அதை நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி பிரகடனப்படுத்திய அவசரகால நிலைமை செயலிழந்துவிடும்.

இந்த அவசரகால நிலைமையை, இதுவரை அரசு தரப்புக்கு, அதன் கூட்டமைப்பிலிருந்தபடியே முண்டு கொடுத்துக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சியும் எதிர்க்கின்றது. அதனை அக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இன்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விட்ட இலங்கை அரசு, அவசரகாலச் சட்டத்தை சபையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப் பின்னடிக்கின்றது. அந்த நிலைமை நீடித்தால் வரும் 14ஆம் திகதி இந்தச் சட்டம் செயலிழந்துவிடும். அப்படி நடக்குமானால், இன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டியபடி, சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாத ஒரு அவசரகால நிலைமை, 14 நாள்கள் மக்களின் தலை மீது கட்டி அடிக்கப்பட்டு, அந்த நாள்களில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் சட்ட முறையற்ற விதத்தில் பறிக்கப்பட்டு, அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட விடயம் நடந்தேறியதாக அது அமையும். அந்த பாதிப்புக்கு – இழப்புக்கு – பொதுமக்கள் சட்ட நிவாரணம் கூடப் பெறமுடியாத நிலையில் அந்த சட்டவிரோத நடவடிக்கை நம்மைக் கடந்து செல்லும் என்பதுதான் உண்மை.

அப்படி ஒரு சட்டவிரோத அவசரகால நிலைமை மக்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டு, 14 நாள்கள் அது நீடிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படாமல், உடனடியாகவே – குறைந்தபட்சம் நாளைக்கே – அந்த அவசர நிலைப் பிரகடனம் நாடாளுமன்றில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அது குறித்து ஒரு தீர்மானம் எட்டப்பட வேண்டும். அதைச் செய்யும் துணிச்சல் ஆளும் தரப்புக்கு உண்டா?

# எரிபொருளுக்கு வரிசை நாட்டில் தொடர்கிறது!

## மக்கள் விசனம்



நாடளாவிய ரீதியில் டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் மக்கள் தங்களது அன்றாடப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலையில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் வருகை தந்து மண்ணெண்ணெய் பெற்று செல்கின்றனர் என முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வாகனங்களிற்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவது தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்தமை தொடர்பில் உண்மை நிலையை மக்கள் இவ்வாறு விளக்குகின்றனர்.

நாங்கள் குறுகிய நேரத்தில் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ள முடிகின்றது. 500 ரூபாவிற்கு மண்ணெண்ணெய் கிடைக்கின்றது. அது தோட்டம் செய்ய போதாது.

ஆனால் மீண்டும் வந்து பெற்றுக்கொள்ள முடியும் என்கின்றனர். ஆனால் வந்து குறுகிய நேரத்துக்குள் பெற்றுக்கொள்ள முடியும். மண்ணெண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. தோட்டத்துக்கும், விளக்கு மற்றும் சமையல் தேவைக்கும் தேவைப்படுகின்றது. ஆனால் வரும் எரிபொருள் போதாது உள்ளது. இருப்பதை பகிர்ந்து கொடுக்கின்றனர். மேலதிகமாக தேவைப்படும் எரிபொருளைக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்கின்றனர்.

கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கூறுகையில், டீசல் பெறுக்கொள்ள வந்தோம் ஆனால் கிடைக்கவில்லை. அதனால் காத்திருக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகளவான எரிபொருள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

எமது பஸ்களுக்கும் தேவைகள் உள்ளன. கணிசமான எரிபொருளை பெறக்கூடியதாக உள்ளது. மக்களுக்கு முழுமையான சேவையை வழங்க எரிபொருளை போதுமான அளவில் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதாகக் கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது. அவ்வாறான சம்பவத்தை காணவில்லை எனவும் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விநியோகம் தொடர்பாக மன்னாரில் அவசரக் கலந்துரையாடல்



தடைகள் இன்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருள்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசரக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலானது மன்னார் மாவட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அரச, தனியார் போக்குவரத்து சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பு, பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்துக்குத் தேவையான எரிபொருள்களை சீரான வகையில் சகல தரப்பினருக்கும் உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடி படகு மற்றும் றோலர் படகுகளுக்குத் தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு அமைவாக மாவட்டத்தில் உள்ள மீனவ அமைப்புகள் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மாவட்டத்தில் திடீரென மின் தடைகள் ஏற்படுகின்ற போது உடனடியாக அவசரத் தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும், குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான எரிபொருளை சிரமங்கள் இன்றி பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் அரச தனியார் பஸ்களுக்கு உரிய வகையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





சித்திரவதை செய்தும், உயிருடன் புதைத்தும் கொல்லப்பட்ட மக்கள்

# உக்ரைனில் உச்சக்கட்ட போர்க் குற்றம் 410 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

## ரஷ்ய படை அட்டூழியம்

உக்ரைனில் ரஷ்ய படைகள் ஆக்கிரமித்த நகரங்களில் பொதுமக்கள் கொடூரமாக கொல்லப்பட்டு, உச்சக்கட்ட போர்க் குற்றங்கள் நடந்தமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதுவரை 410 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரஷ்ய வீரர்கள் கசாப்பு கடைக்காரர்களாக மாறி விட்டார்கள் என ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டி உள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா போர் நிறுத்தம் தொடர்பாக இருநாட்டு தூதுக் குழுக்களுக்கு இடையே கடந்த ஒரு வாரம் முன்பு நடந்த பேச்சுக்கு பின், உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தாக்குதல் பல மடங்கு குறைக்கப்படும் என்று ரஷ்ய பாதுகாப்பு துணை அமைச்சர் தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து உக்ரைனை இரண்டாக பிரிக்கும் திட்டத்துடன், ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் வசிக்கும் கிழக்கு உக்ரைனில் உள்ள டான்பாஸ் பிராந்தியத்தை முழுமையாக கைப்பற்ற ரஷ்யா கவனம் செலுத்தி படைகளை அங்கு குவித்து வருகிறது. இதனால், தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்களில் இருந்து ரஷ்ய படைகள் கடந்த இரு தினங்களாக வாபஸ் பெறப்பட்டன. கீவ்வின் புறநகர் புச்சா உள்ளிட்ட நகரங்கள் முழுமையாக உக்ரைன் வசம் வந்துள்ளது. அங்கு மீட்புப் பணியில் இறங்கிய உக்ரைன் ராணுவம் பல திடுக்கிடும் விடயங்களை கண்டறிந்தது.

ஏற்கனவே பெரும்பாலான நகரங்களில் வானுயர கட்டடங்களை தரைமட்டமாக்கிய ரஷ்ய படையினர், மனித படுகொலைகளை செய்து புதை குழிகளில் வீசி சென்றிருக்கும் அதிர்ச்சி சம்பவம் அம்பலமாகி உள்ளது. ரஷ்ய படைகள் வெளியேறிய புச்சா பகுதியில் சுமார் 410 சடலங்கள் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையிலும், துப்பாக்கி குண்டு காயங்களுடனும், சித்திரவதையால் ஏற்பட்ட காயங்களுடனும் தெருக்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. கைகள் கட்டி அருகில் இருந்து சிலர் கொடூரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பலரது சடலங்கள் கறுப்பு நிற பிளாஸ்டிக் பைகளால் சுற்றப்பட்டிருந்தது. இவர்களில் 140 பேர் வழக்கறிஞர்கள் மற்றும் பிற துறை நிபுணர்கள். பலரின் பின்பக்க தலையில் துப்பாக்கி குண்டு பாய்ந்துள்ளது. இதனால் தப்பிப்பதற்காக ஓடும் முயற்சியில் அவர்கள் பின்னால் இருந்து சுடப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், மக்கள் பலர் வீடுகளின் அடித்தளத்தில் பதுங்கி இருந்த நிலையில், அந்த இடத்திலேயே பலர் சடலமாக கிடக்கின்றனர். கொங்கிறீட் சுரங்கங்கள் அமைக்கப்பட்டு அங்கு சிலர் உயிருடன் புதைக்கப்பட்டும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான படங்களை பார்த்து உலக நாடுகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளன, ரஷ்யா மீது கடுமையான தடைகள் விதிக்க அழைப்பு விடுத்துள்ளன. உக்ரைனில் ரஷ்யா கடுமையான போர்க் குற்றத்தில் ஈடுபட்டு இனப்படுகொலைக்கான சதியை அரங்கேற்றி இருப்பது அம்பலமாகி உள்ளது.

உலக நாடுகள் உதவியால், சரணடையாமல் போராடும் உக்ரைனுக்கு பாடம் கற்பிக்கவே, ரஷ்ய படைகள் இந்த கொடூரமான செயல்களில் ஈடுபட்டுள்ளன என கூறப்படுகிறது. இது, ரஷ்யாவின் இனப்படுகொலை என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டினார். அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "ரஷ்ய ராணுவத்தின் போர்க்குற்றங்களை வெளிப்பாடாக மாற்றுவதற்கு சாத்தியமான அனைத்தையும் செய்ய வேண்டிய நேரம் இது. ரஷ்ய தாய்மார்கள் கொள்ளையர்களை வளர்த்தாலும், அவர்கள் எப்படி கசாப்புக் கடைக்காரர்கள் ஆனார்கள்? அவர்களுக்கு ஆன்மா இல்லை. இதயம் இல்லை. உக்ரைனில் ரஷ்யப் படைகள் செய்யும் ஒவ்வொரு குற்றத்தையும் விசாரிக்க சிறப்பு நீதி விசாரணை உருவாக்க நடவடிக்கை எடுப்போம். மற்ற ஆக்கிரமிப்பு பகுதிகளில் இருந்து ரஷ்யப் படைகள் விரட்டப்பட்டால் இன்னும் பல கொடுமைகள் வெளிப்படும்" என்று கூறினார். ஆனால் இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ரஷ்யா மறுத்துள்ளது.

# புடினுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்கிறார் ஜோ பைடன்

மேற்கு நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் மீது ரஷ்ய ராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக புச்சா நகரில் கொத்துக்கொத்தாக மக்கள் இறந்து கிடந்தமை உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ரஷ்ய அதிபர் புடின் போர்க் குற்றம் புரிகிறார் என பல்வேறு தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஆனால் இதனை ரஷ்ய தரப்பு மறுத்துள்ளது.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

'புச்சா நகரில் என்ன நடந்தது என்பதை அனைவரும் பார்த்தீர்கள். புடின் ஒரு போர்க் குற்றவாளி ஆவார்' என்று ஜோ பைடன் செய்தியாளர்களிடம் கூறினார்.

உக்ரைன் தலைநகர் கீவுக்கு வெளியே உள்ள முக்கிய நகரான புச்சாவில் கொல்லப்பட்ட மக்களின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

அப்பகுதியை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பார்வையிட்டார். பின்னர் பேசிய அவர், ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளை இனப்படுகொலை என்று கூறினார். மேலும், மேற்கு நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.



# ரஷ்ய தூதர்களை வெளியேற்ற ஜேர்மனி, பிரான்ஸ் முடிவு



உக்ரைன்-ரஷ்யா போர் 41 ஆவது நாளாக நீடிக்கும் நிலையில், மைக்கோலைவ் நகரில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் பொதுமக்கள் 10 பேர் கொல்லப்பட்டனர் எனவும், 46 பேர் காயமடைந்தனர் எனவும் அந்நகர மேயர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புச்சா நகரில் ரஷ்ய படைகள் நிகழ்த்திய படுகொலைகளுக்கு பதிலடியாக 40 ரஷ்ய தூதர்களை வெளியேற்ற ஜேர்மனி அரசு முடிவு செய்துள்ளது. இதேபோல் பிரான்ஸ் அரசும் தனது நாட்டில் உள்ள 35 ரஷ்ய தூதர்களை வெளியேற்ற உள்ளதாக தெரிவித்துள்ளது. உக்ரைன் ஆதரவு நாடுகளும் ரஷ்ய தூதர்களை வெளியேற்ற முடிவு செய்துள்ளன என தகவல்கள் வெளியாகி உள்ளன.

உக்ரைன் தலைநகர் கீவ் அருகே உள்ள ரஷ்ய படைகளில் மூன்றில் இரண்டு பங்கு படைகள் திரும்ப பெறப்பட்டுள்ளனர் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் அந்த படையினர் பெலாரஸில் ஒருங்கிணைக்கப்பட்டு, உக்ரைனில் உள்ள வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்ய வீரர்கள் புச்சா நகரை விட்டு வெளியேறிய பிறகு கண்டெடுக்கப்பட்ட உடல்கள் அதிர்ச்சியளிக்கின்றன என அல்பேனிய பிரதமர் எடிராமா தெரிவித்துள்ளார். இது போன்ற கொடூர குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். உக்ரைன் பொதுமக்கள் மீதான தாக்குதல் தமது நாட்டில் நடைபெற்ற போரை நினைவுபடுத்துவதாக கொசோவோ பிரதமர் அல்பின்குர்தி குறிப்பிட்டுள்ளார்.



# ஷாங்காய் நகரில் கொரோனா தீவிரம்

சீனாவில் முதன்முதலில் பரவிய கொரோனா தொற்றுப் பரவல் பின்னர் தற்போது மீண்டும் வேகமெடுக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல நகரங்களில் கடுமையான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. சீனாவின் மிகப்பெரிய நகரமான ஷாங்காயில் தொற்று பரவலை கட்டுப்படுத்த 2.6 கோடி மக்களுக்கும் கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பணியில் உதவுவதற்காக 2,000 ராணுவ வீரர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் உட்பட சுமார் 10 ஆயிரம் பேர் ஷாங்காய்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சீனாவில் ஒரே நாளில் 13 ஆயிரம் பேருக்கு புதிதாக தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொற்று பாதிக்கப்பட்டவர்களில் 9 ஆயிரம் பேர் ஷாங்காய் நகரைச் சேர்ந்தவர்கள்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது கட்டாயமல்ல கட்டுப்பாடுகளை திரும்பப்பெற்றது தமிழக அரசு



தமிழகம் முழுவதும் கொரோனா பாதிப்பு குறைந்து விட்ட நிலையில், கொரோனா காலத்தில் பொதுச் சுகாதாரத்துறை சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் திரும்பப் பெறப்படுகின்றன.

இந்தியாவில் கொரோனா பரவல் வெகுவாக குறைந்துள்ள நிலையில், கடந்த 31 ஆம் திகதியுடன் கொரோனா நெறிமுறைகளும் கட்டுப்பாடுகளும் முடிவுக்கு வருகின்றன என மத்திய அரசு அறிவித்திருந்தது. இது சம்பந்தமான முடிவுகளை அந்தந்த மாநிலங்களே எடுத்துக்கொள்ளலாம் என்ற அறிவிப்பையும் வெளியிட்டிருந்தது.

இதையடுத்து பாதிப்பு மிகவும் குறைவாக இருந்த மாநிலங்கள், கொரோனா கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதாக அறிவித்தன. முகக்கவசம் அணிவது, தொற்றுநீக்கித் திரவங்களைப் பயன்படுத்துவது போன்ற அடிப்படை விடயங்களை மக்களே பின்பற்றிக்கொள்ளலாம் என்ற அறிவிப்பும் வெளியாகியிருந்தது. இந்தநிலையில், தமிழகத்திலும் பொதுச்சுகாதாரத்துறைச் சட்டத்தின்படி கொரோனா தொடர்பான கட்டுப்பாடுகள் திரும்பப் பெறப்படுகின்றன என சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாடுமுழுவதும்முதல்தவணை தடுப்பூசியை 92 சதவீதம் பேரும், 2ஆம் தவணை தடுப்பூசியை 75 சதவீதம் பேரும் செலுத்தியிருக்கிறார்கள். மேலும், தமிழகம் முழுவதும் கொரோனா பாதிப்பு குறைந்துவிட்டது. இதன் காரணமாக கொரோனா காலத்தில் பொதுச் சுகாதாரத் துறை சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் திரும்பப் பெறப்படுகின்றன.

முகக்கவசம் அணிதல், தனி மனித இடைவெளி, தொற்றுநீக்கித் திரவம் பயன்படுத்துதல் ஆகியவற்றை பொதுமக்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் பின்பற்றவேண்டும். இது தொடர்பாக மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகள், மாவட்ட நிர்வாகங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தடுப்பூசி செலுத்தாதவர்கள் இனி தாமாக முன்வந்து, சுய விருப்பத்தின்பேரில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வரவேண்டும், என சுகாதாரத்துறை வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசு வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டியதும், கொரோனா தடுப்பூசி செலுத்துவதும் இனி கட்டாயமல்ல. சுய விருப்பத்தின் அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசிகளை மக்கள் செலுத்திக் கொள்ளலாம், என்று இந்த அறிவிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

## அமெரிக்கா, தென்கொரியா நாடுகளுக்கு ஸ்டாலின் பயணம் செய்யவுள்ளார் என்கிறார் அமைச்சர் தென்னரசு



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் நான்கு நாள் அரசுமுறை பயணமாக டுபாய், அபுதாபி, அமீரக நாடுகளுக்குச் சென்று திரும்பினார். அவரது சுற்றுப்பயணத்தின் மூலம் பல நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்தநிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறார் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுத்துள்ளன. அவரது அடுத்த கட்ட சுற்றுப் பயணம் தொடர்பாக விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும், என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## குஜராத் தேர்தலில் கெஜ்ரிவால் வெற்றி பெற முடியாது மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் எதிர்வுகூறல்




டெல்லியைத்தொடர்ந்து பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சி வெற்றிபெற்று ஆட்சியை பிடித்துள்ளது. இந்தநிலையில் இந்த ஆண்டு இறுதியில் குஜராத்தில் நடைபெறும் சட்டசபைத் தேர்தலில் தமது கட்சியை களம் இறக்க டெல்லி முதல்வரும், ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் திட்டமிட்டுள்ளார்.

இதையடுத்து, கெஜ்ரிவாலும் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மானும், இரண்டு நாள் பயணமாக அகமதாபாத் சென்றுள்ளனர். அங்கு ஆம் ஆத்மி சார்பில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற அவர்கள், குஜராத்தில் தங்கள் கட்சிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். இதன் மூலம் மாநிலத்தில் நிலவும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனவும் அவர்கள் உறுதியளித்தனர்.

இதுகுறித்து டெல்லியில் ஏ.என்.ஐ.செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், உத்தரப்பிரதேசத்தில் ஒரு இடத்தில் கூட கெஜ்ரிவால் கட்சியால் வெற்றி பெற முடியவில்லை, உத்தரகாண்ட், கோவாவில் அவரது நிலையைப் பார்த்தீர்களா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஆம் ஆத்மி கட்சியினர் ஊடகங்கள் மூலம் தங்களுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றனர் எனவும், ஆனால் தேர்தல் களத்தில் எதுவும் நடக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் தேர்தல்கள் மூலம் பா.ஜ.க. மீண்டும் இமாச்சல பிரதேசம் மற்றும் குஜராத்தில் ஆட்சி அமைக்கும் என்றும், பிரதமர் மோடி உலக அளவில் மிகவும் விரும்பப்படும் தலைவராக இருக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார். பஞ்சாபில் பா.ஜ.க. மிகவும் தாமதமாக பிரச்சாரத்தை தொடங்கினாலும், வாக்கு சதவீதம் அங்கு அதிகரித்துள்ளது, என்றும் அமைச்சர் அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

## கோடை விடுமுறை நாள்கள் குறைவு ஜூன் 13 இல் பாடசாலைகள் திறப்பு

முதலாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கொரோனா தீவிரம் குறைவடைந்ததையடுத்து, நேரடி வகுப்புகள் கடந்த ஆண்டு செப்டெம்பர் முதலாக ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

பிளஸ்-2 மாணவர்களுக்கு பொதுத்தேர்வு மார்ச் மாதத்தில் தொடங்குவது வழக்கம். அதனைத்தொடர்ந்து 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும் பிற வகுப்புகளுக்கான ஆண்டு இறுதித் தேர்வுகளும் நடைபெறும்.

நடப்பு கல்வி ஆண்டில் பாடசாலைகளின் நேரடி வகுப்புகள் தாமதமாக தொடங்கியமையால், பொதுத் தேர்வுகள் மற்றும் இறுதித் தேர்வுகள் மே மாதம் இறுதிவரை நடைபெறவுள்ளன. அதன்படி, 12 ஆம் வகுப்புக்கு பொதுத்தேர்வு மே மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகி, 28 ஆம் திகதியுடன் நிறைவுபெறவிருக்கிறது.

அதேபோல், ஏனைய வகுப்புகளுக்கான பரீட்சைகளும் மே மாத இறுதி வரை நடைபெறவுள்ளன. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மே 13 ஆம் திகதி, இந்தத் தவணைக்குரிய கடைசி பாடசாலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த கல்வியாண்டுக்கான (2022-23) அனைத்து வகுப்புகளும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வித்துறை அறிவித்துள்ளது. 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் 24 ஆம் திகதி முதல் வகுப்புகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த ஆண்டு பாடசாலைக் கோடை விடுமுறைக்காலம் வெகுவாக குறைந்துள்ளது



## 2 மாதங்களுக்குப் பின்னர் வெளியான மின்னஞ்சல் விவரம் இந்தியாவில் 20 இடங்களில் குண்டுவெடிக்குமென மிரட்டல்

மும்பையில் உள்ள தேசிய பாதுகாப்பு முகமை அலுவலகம் மற்றும் பிற சட்ட அமுலாக்க அமைப்புகளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் பற்றிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

அந்த மின்னஞ்சலில், பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளோம். 20 இடங்களில் ஆர்.டி. எக்ஸ் வெடிகுண்டுகள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்படும். சுமார் 2 கோடி மக்களைக் கொல்லத் திட்டமிட்டு உள்ளோம். இதன் மூலம் மிகப்பெரிய அழிவு ஏற்படும். இதற்கான வெடிகுண்டுகள், சில அமைப்புகள் மூலம் எனக்கு எளிதாக கிடைத்துள்ளன. அவற்றை பயன்படுத்தி முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்தப்படும். என்னைத் தடுக்க முடிந்தால் தடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், தாக்குதல்கள் அனைத்தும் ஏற்கனவே திட்டமிடப்பட்டுவிட்டன, என்று குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டபோது 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் பிரசாரத்தில் இந்தியப் பிரதமர் மோடி தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இதனால், கடித விவரத்தை வெளியில் பகிரங்கப்படுத்தாமல் அவருக்கு தேசிய பாதுகாப்பு முகமை அதிகாரிகள் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தனர் என கூறப்படுகிறது. இந்த நிலையில், மின்னஞ்சலில் குறிப்பிட்டபடி பெப்ரவரி 28 ஆம் திகதி எந்தத் தாக்குதலும் நடைபெறவில்லை. தேசிய பாதுகாப்பு முகமை அதிகாரிகள், உளவுத் துறையினர் மற்றும் ஐ.பி. அதிகாரிகளும் குறித்த அநாமதேய மின்னஞ்சல் குறித்து ரகசிய விசாரணைகளை நடத்தினர். அந்த மின்னஞ்சல் அனுப்பப்பட்ட முகவரியை வைத்துக்கொண்டு சைபர் கிரைம் நிபுணர்களின் துணையுடன் ஆய்வு செய்து வரப்படுகிறது. அத்தோடு தீவிரவாத அமைப்புகளையும் கண்காணித்து வருகிறார்கள்.

தற்போது இந்தியப் பிரதமர் மோடிக்கு கூடுதல் மற்றும் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு நாள்களுக்கு முன்புதான் தேசிய பாதுகாப்பு முகமை அதிகாரிகள் இதற்கான காரணத்தை வெளியிட்டனர். இரண்டு மாதங்களுக்கு முன்பு பிரதமருக்கு வந்த மின்னஞ்சல் மிரட்டல் பற்றியும், அதில் குறிப்பிடப்பட்டவை குறித்த தகவல்களையும் அதிகாரிகள் வெளியிட்டனர். இதன்காரணமாகவே பிரதமருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.






# அதவுல்லாவின் அக்கரைப்பற்றில் அரசாங்கத்திற்கு எதிரான சீற்றம்!

நூருல் ஹுதா உமர்

நாட்டின் பெருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அக்கரைப்பற்றிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அக்கரைப்பற்று பிரதான வீதி பட்டினபள்ளிக்கு அருகில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிக இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிரான கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அரசுக்கு ஆதரவளிக்கும் அரசின் பங்காளி கட்சிகளில் முஸ்லிம் கட்சியாக இருக்கும் ஒரே கட்சியான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதவுல்லாவின் ஊரான அக்கரைப்பற்றிலும் போராட்டம் அதிகரித்திருப்பதன் மூலம் நிரந்தரமாக அரசின் பங்காளி அந்தஸ்திலிருந்து தேசிய காங்கிரஸ் விலகவேண்டிய கட்டாயம் வந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## மூதாட்டி படுகொலைச் சந்தேகநபரை பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருதில் மூதாட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை 48 மணித்தியாலங்கள் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு கல்முனை நீதிவான் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

சாய்ந்தமருது பகுதியில் கடந்த ஜனவரி மாதம் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாகி, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்த சந்தேக நபர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டிருந்தார். அவரை திங்கட்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில்சாய்ந்தமருதுபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம் சுடீன் தலைமையிலான குழுவினர் முன்னிலைப்படுத்தினர். சந்தேக நபரை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கான அனுமதியை நீதிவான் வழங்கி உத்தரவிட்டார்.

கடந்த 27.01.2022 அன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது 15 ஆம் பிரிவிலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த சுலைமான் செய்யது புஹாரி என்ற மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான விடுதி ஒன்றிலிருந்து சந்தேக நபர் குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார். கல்முனை பகுதியைச் சேர்ந்த முகைதீன் பாவா லாபீர் (வயது-45) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவர் வேறு பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூதாட்டியின் இரு காதுகளை துண்டாக்கி நகைக் கொள்ளை

பொத்துவில் பசரிச்சேனை பிரதேசத்தில் வீடு புகுந்து 70 வயது மூதாட்டியின் இரு காதுகளையும் துண்டாக்கி, தங்க நகை அபகரிக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியின் கணவர் வீட்டை விட்டு வெளியில் சென்ற சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மூதாட்டி, ஆபத்தான நிலையில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெப்ப காலமாதலால் கிழக்கில் அதிக வெள்ளரிப் பழ விற்பனை

(க.கிருபாகரன்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்சமயம் வறட்சியுடன் கூடிய அதிக வெப்பமான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் பகல் வேளைகளில் வெளியில் நடமாடுவதில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த அதி உஷ்ண கால நிலையில் நீர்த்தன்மை அதிகம் கொண்ட பழங்களை வாங்கி உண்டு தாகசாந்தி செய்து உஷ்ணத்தை சமாளித்துக் கொள்வதில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய அறுவடை காலமாகவுள்ள வெள்ளரிப் பழங்களை வாங்கி உண்பதில் ஆர்வம் காட்டும் பொதுமக்கள், அதேவேளை தற்போது அறுவடை செய்யப்படும் வர்த்தகப் பழங்களையும் வாங்கி சாப்பிடுகின்றனர்.

மக்கள் மத்தியில் இப்பழங்கள் அதிக வரவேற்பைப் பெற்றிருப்பதால் பலர் இப்பழங்களை வாகனங்களில் கொண்டு சென்று உள்ளூர் வீதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். தமக்கு இக்காலகட்டத்தில் போதியளவு வருமானம் கிடைப்பதாக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

## பேராசிரியர் யோகராசாவின் நூல் மட்டக்களப்பில் வெளியீடு

(க.கிருபாகரன்)



பேராசிரியர் செ.யோகராசா எழுதிய 'ஈழத்து நவீன இலக்கியங்கள் – படைப்பாளர்கள்– தடங்கள்' நூல் வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர்ச.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு அதிதிகளாக பேராசிரியர்சி.மௌனகுரு, பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ், பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, கலாநிதி ஜீ.கென்னடி, கலாநிதி நதிரா மரியசந்தனம், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச.நவநீதன், வைத்திய கலாநிதி இ.முரளீஸ்வரன், எழுத்தாளர் உமா வரதராஜன், கவிஞர் சோலைக்கிளி, எழுத்தாளர் மண்டூர் அசோகா, கலாநிதி றனிபா இஸ்மாயில், எழுத்தாளர் த.மலர்ச்செல்வன், எழுத்தாளர் சிராஜ் மசூர், எழுத்தாளர் ச.மணிசேகரன் மற்றும் ஆய்வாளர் சி.ரமேஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புலவர் வி.றஞ்சிதமூர்த்திபெற்றுக்கொள்வார். இந்நூலுக்கான வெளியீட்டுரையை த.மேகராசாவும், நூல் மதிப்பீட்டை எழுத்தாளர் எம்.அப்துல் றசாத்தும், ஏற்புரையை பேராசிரியர் செ.யோகராசாவும் நிகழ்த்துவர்.

இதில் ஈழத்து நவீன இலக்கியப் படைப்பாளர்களினதும், ஆய்வாளர்களினதும் நூல்களுக்காக பேராசிரியர் செ.யோகராசா எழுதிய 76 முன்னுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆர்ஜென்டினா மோட்டோ கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம் அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ முதலிடம்




ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற மோட்டோ கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

மோட்டோ ஜிபி பந்தயம் இந்த வருடம் 21 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றது. இந்த ஆண்டின் மூன்றாவது சுற்றான ஆஜென்ரீனா கிராண்ட் பிரிக்ஸ், டெர்மாஸ் டி ரியோ ஹோண்டோ சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 120.2 கிலோ மீற்றர் பந்தயத் தூரத்தினை 41 நிமிடங்கள், 36.198 வினாடிகளில் கடந்து அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ முதலிடத்தை பிடித்து, 25 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

டுகாடி அணியின் ஜோர்ஜ் மார்டின், 0.807 செக்கன்கள் பின்தங்கிய நிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்து இரண்டாவது இடத்தையும் அதற்கான 20 புள்ளிகளையும் தனதாக்கினார். இவரையடுத்து, சுசூக்கி அணியின் அலெக்ஸ் ரின்ஸ், 1.330 செக்கன்கள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள மூன்று சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ ஒரு வெற்றி, 45 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். கே.ரி.எம். அணியின் பிரட் பைண்டர் 38 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், டுகாடி அணியின் எனே பஸ்டியானினி ஒரு வெற்றி, 36 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

தொடரின் நான்காவது சுற்றான அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 11ஆம் திகதி அமெரிக்காஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## பிறந்தநாளில் அதிக ஓட்டங்களை எடுத்த வீரர் சச்சினின் 24 ஆண்டு சாதனை முறியடிப்பு



நியூசிலாந்து, நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் டொம் லதாம் தனி ஆளாகப் போராடி சதமடித்தார். அவர் 140 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். பிரேஸ்வெல் 41 ஓட்டங்களை எடுத்தார். நியூசிலாந்து அணி, 50 ஓவர்களில் 264 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன்மூலம் 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றியைப் பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரை ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே 2-0 என கைப்பற்றியது.

அந்தப் போட்டியில் சதமடித்த டொம் லதாம், பிறந்த நாள் அன்று அதிக ஓட்டங்களை அடித்தவர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார். இவர் சச்சினின் 24 ஆண்டு கால சாதனையை முறியடித்துள்ளார். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 1998 ஆம் ஆண்டு தனது பிறந்தநாளில் 134 ஓட்டங்கள் அடித்ததே இது வரை சாதனையாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக ரி-20 போட்டிகளில் விளையாடிய இந்திய வீரர்கள் பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்தார் டோனி



15 ஆவது ஐ.பி.எல். தொடர் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதியிருந்தன. இந்தப் போட்டியில் சென்னை அணி தனது தொடர்ச்சியான மூன்றா வது தோல்வியைச் சந்தித்தது. ஆனாலும், இந்தப் பங்கேற்றதன் மூலம் அதிக ரி-20 போட்டிகளில் விளையாடிய இந்திய வீரர்களின் பட்டியலில் எம்.எஸ்.டோனி இரண்டாம் இடம் பிடித்துள்ளார். நேற்றைய போட்டி அவர் விளையாடிய 350 ஆவது ரி-20 போட்டியாகும். இந்திய அணித்தலைவர் ரோகித் சர்மா 372 ரி-20 போட்டிகளில் விளையாடி, இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் நீடிக்கிறார். 336 ரி-20 போட்டிகளில் பங்கேற்றுள்ள சுரேஷ் ரெய்னா இந்தப் பட்டியிலில் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவராக இருந்த டோனி, இந்த சீசன் தொடங்குவதற்கு முன்பு, கப்டன் பதவியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## மகளிர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர்
# ஏழாவது முறையாக சம்பியனானது ஆஸ்திரேலியா

கிறிஸ்ட்செர்ச்சில் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவெடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து, 356 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனை அலீசா ஹீலி 170 ஓட்டங்களை எடுத்தார். ஹெய்ன்ஸ் 68 ஓட்டங்களையும், பெத் மூனெ 62 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இதையடுத்து, 357 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கிய இங்கிலாந்து அணி 43.4 ஓவர்களில் 285 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழக்க, ஆஸ்திரேலிய அணி 71 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றியது. சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும், இங்கிலாந்தின் நடாலி சீவர் நிலைத்து ஆடி சதமடித்தார். அவர் 121 பந்துகளில் 148 ஓட்டங்களை எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காது களத்திலிருந்தார்.

இறுதிப்போட்டியினதும் தொடரினதும் சிறப்பாட்டக்காரராக ஆஸ்திரேலிய அணியின் அலீசா ஹீலி தெரிவானார். ஆஸ்திரேலிய மகளிர் அணி ஏழாவது தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 69 லட்சம் மக்களின் ஆதரவு இப்பவும் இருப்பதால் ஜனாதிபதி கோட்டா பதவிவிலகத் தேவையில்லை

## இப்பவும் இப்படி நம்புகிறார் ஜோன்ஸ்டன்



இலங்கையில் உள்ள 69 லட்சம் மக்களின் ஆதரவு இன்னும் இருப்பதால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தனது இராஜினாமாவை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்த அமைச்சர், மக்கள் ஆணையை ஜனாதிபதி இன்னும் வைத்திருக்கிறார் எனத்தான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு இன்னும் மக்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். தற்போது முன்னெடுக்கப்படும் பொதுப் போராட்டங்கள் சிறு போராட்டங்களே எனத் தெரிவித்த அமைச்சர், எனினும் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

### போராட்டத்தில் ஈடுபட்டவர் பொலிஸார் தாக்கி உயிரிழப்பா?

## உண்மையில்லை என்கிறது பொலிஸ் ஊடகப்பிரிவு

மிரிஹானவில் அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தின்போது அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கு பொறுப்பு கூறும் முகமாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேற்படி போராட்டத்தின் போது பொலிஸாரால் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர், பொலிஸாரின் தாக்குதலில் ஏற்பட்ட காயங்களால் உயிரிழந்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டு களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் உயிருடன் இருக்கின்றனர் எனவும், ஆர்ப்பாட்டக்காரர் எவரும் உயிரிழக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுபோன்ற போலியான தகவல்கள் தொடர்பாக மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

# புதிய போத்தலில் உள்ள பழைய மது கோட்டா நியமிக்கும் அமைச்சரவை!

## கம்மன்பில சாட்டை



புதிய அமைச்சரவை புதிய போத்தலில் உள்ள பழைய மது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனவே, அடுத்த தலைவர்களை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் இதை வேறு யாரும் முடிவு செய்யக்கூடாது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

புதிய அமைச்சரவை என்பது புதிய போத்தலில் உள்ள பழைய மது என்றும் அத்தியாவசிய சேவைகளை மீளப் பெறுவதற்கும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும் அனைத்துக் கட்சிகளின் இடைக்கால அரசாங்கமே தமது கோரிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிறந்து ஒருநாளான கைக்குழந்தை ஒன்றும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பு



நாடளாவிய ரீதியில் பல்வேறு வடிவங்களில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் கோஷங்களும் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று திங்கட்கிழமை பிறந்து ஒருநாளான குழந்தையொன்று அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் அவர்களின் பெற்றோருடன் இணைந்துள்ளமை அனைவரையும் பெரும் கவலையையடைய வைத்துள்ளது.

சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தைப் பிள்ளைகளுக்கு வழங்கும் பொருட்டே இவ்வாறு பெற்றோர் தமது பிள்ளையுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு நெருக்கமான சிலர் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனராம்


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமான சிலர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கூறப்படும் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

விமானத்தில் பயணிப்பதற்காக அவர்கள் செல்லும் படம் ஒன்றும் வைரலாகி வருகின்றது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வலுவடைந்து வரும் நிலையிலேயே இந்தத் தகவல்களும் வெளியாகியுள்ளன.

இதேவேளை, நாமல் ராஜபக்ஷவின் மனைவி உள்ளிட்ட சிலர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### நடுவீதியில் அமர்ந்து வயோதிபர் போராட்டம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

இந்நிலையில், நேற்று (திங்கட்கிழமை) வயோதிபர் ஒருவர் நடுவீதியில் அமர்ந்து தனது எதிர்ப்பை அரசாங்கத்துக்கு எதிராக வெளியிட்டுள்ளார்.

குறித்த வயோதிபர் கொழும்பு – கொட்டாவ, மத்தேகொட பிரதேசத்தில் வீதியின் நடுவிலமர்ந்து தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2022இல் வெளியிடப்பெற்றது.